# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 12.06.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

நபிமார்கள் மற்றும் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுடன் அல்லாஹ்வுடைய பரிமாற்றம் மிகவும் வியப்பிற்குரியதாகும். அவர்கள் மறைவாக இருந்து இறைவனது இபாதத்தில் மூழ்கித் திளைத்து விடுகின்றனர். ஆனால் ஒரு கட்டளையின் மூலம் அல்லாஹ் அவர்களை வெளியில் கொண்டு வந்து விடுகின்றான். மேலும் அதற்கு மிகச் சிறந்த உயர்ந்த முன்மாதிரியாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விளங்குகின்றார்கள். அவர்கள் இரவின் இருளில் ஹிராக் குகையில் பல நாட்கள் தனது எஜமானனாகிய இறைவனின் முன் இபாதத்தில் மூழ்கியிருந்தார்கள். உலகக் காரியங்களில் எந்த ஆர்வமும் காட்டியதில்லை. உலகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் அவர்களுக்கு எந்தக் கவனமும் இருந்ததில்லை. ஆனால் அவர்களின் ஒவ்வோர் அசைவும், உண்ணலும், குடித்தலும் அல்லாஹ்வின் அன்பில், இபாதத்தில் மூழ்கியதாகவே காணப்பட்டது. அல்லாஹ் அவர்களை அந்த குகையிலிருந்து வெளியேறுமாறு கட்டளையிட்டபோது, உலகத்தை ஒரே இறைவனின் பக்கம் அழைக்குமாறு கூறியதும் அவர்கள் உலகத்தை இறைவன்பக்கம் அழைக்க ஆயத்தமானார்கள். அந்த நடைமுறைக்கும்கூட எந்த முன்மாதிரியும் இல்லை. இறைவனது அன்பிற்குரிய இருப்பு மீது கொண்ட பிரியத்தின் காரணத்தால் மக்களின் சேவகராக விளங்கினார்கள். இதனால் மக்களின் அநீதிக்கு இலக்கானார்கள். மக்களின் மீதுள்ள அனுதாபம் மற்றும் இறையன்பில் மூழ்கிய அன்னாரின் உள்ளம் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தவில்லை. ஒவ்வொரு வினாடியும் தமது பணியில் முன்னேறிக் கொண்டே சென்றனர். ஒவ்வொரு நாளும் அன்னாரின் ஜமாஅத் விரிவடைந்து கொண்டேதான் சென்றது. அவர்களது வாழ்நாளிலேயே இஸ்லாம் அரபு நாட்டை விட்டு வெளியே புறப்பட்டது. பிறகு உலகம் கண்டது. ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா வரை முஸ்லிம்களின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது.

பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, அல்லாஹ்வின் நியதிக்கேற்ப முஸ்லிம்களின் ஆன்மீக நிலை கடும் வீழ்ச்சியை அடைந்தது. இந்த ஆன்மீக வீழ்ச்சியின் தாக்கத்தால் சில முஸ்லிம் ஆட்சியாளர்களின் உலகியல் ஆற்றலும் கூட கைநழுவிச் சென்றது.

இறைவனது வாக்குறுதிக்கேற்ப முழுமையான மார்க்கமாகிய இஸ்லாம் மட்டுமே முழு மனித குலத்திற்கும் உரியதாகும். எனவே இறை நியதி உலகத்தை பராமரிக்க நாடியது. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் மூலம் அந்த பராமரிப்பு நடைபெற வேண்டும் என்றும் நியமிக்கப்பட்டிருந்தது. பிறகு இஸ்லாம் ஒரு புதிய வேகத்துடன் உலகில் திரும்ப நிலைநாட்டப்பட்டது. இஸ்லாம் இதுவரை பரவாத மூலைகளிலும் உண்மையான இஸ்லாத்தின் செய்தி சென்று சேர்ந்தது. அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தனது இறுதி மார்க்கத்தின் பரவலை முழுமைப்படுத்துவதற்காக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை மஹ்தி மஸீஹாக அனுப்பினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி ஷரீஅத் இல்லாத நபியாக அனுப்பினான். அன்னாரின் ஆரம்பகால வாழ்வைப் பார்த்தோம் எனில் அல்லாஹ் மற்றும் ரஸுலின் மீதுள்ள நேசத்தில் மூழ்கியிருந்ததை காண முடிகிறது. உலகில் அவர் எந்த சிறப்பையும் காண முடியவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இருந்த விருப்பம் ஒரே இறைவனின் இபாதத்தில் மூழ்கியிருப்பதாகவே இருந்தது. தனது எஜமானரும் வழிகாட்டியுமாகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பில் திளைத்தவாறு அன்னாரின் மீது ஸலவாத்தில் மூழ்கியிருந்தார்கள். இந்த இபாதத் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் விளைவால்தான் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்தினரின் நிலை அவர்களின் நிம்மதியைக் குலைத்தது. எனவே அவர்கள் இரவுகளை துஆவில் கழித்தார்கள்.

அல்லாஹ்வின் ஒருமைப்பாட்டை உலகில் நிலைநாட்டும் உத்வேகம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் காரணத்தால் இஸ்லாத்திற்கான தற்காப்பிற்காக எல்லா முயற்சியும் மேற்கொண்டார்கள். திருக்குர்ஆனை ஆழ்ந்து படித்தார்கள். மற்ற மார்க்க நூல்களையும் படித்து திருக்குர்ஆனின் சிறப்பை நிரூபித்துக் காட்டும் முயற்சியில் மூழ்கினார்கள். இதுபோன்ற ஒருவரை உலகமும் கண்டதில்லை. அக்காலத்தில் வாழ்ந்த அன்னியரும் சாட்சியாவர்; நம்மவரும் சாட்சியாவர். அல்லாஹ் மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனாவான். அன்னாரின் இந்த ஆழ்ந்த பற்றையும் பேரவாவையும் நன்கறிந்த இறைவன் அன்னாரை திரையிலிருந்து வெளியில் கொண்டு வந்தான். அரபியில் ஒரு நீண்ட இல்ஹாம் இறங்கியது. அதனை பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதியும் உள்ளார்கள். அதன் சிறு பகுதியை அன்னார் சிராஜுல் முனீர் என்ற நூலில் எழுதியுள்ளார்கள். அதனை எடுத்துரைக்கிறேன். அன்னார் கூறுகின்றார்கள்: இந்த முன்னறிவிப்பு அதன் 242 -வது பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

அதன் பொருள்: நான் உன்னை என் பக்கம் உயர்த்திக் கொள்வேன். நான் எனது பிரியத்தை உனக்கு வழங்குவேன். இதன் மொழிபெயர்ப்பையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அதாவது மக்கள் எதிர்ப்பு செலுத்துவார்கள். எனவே இறைவன் ஒருபுறம் தனது அன்பின்பால் எடுத்துக் கொள்வான். பிறகு கூறினார்கள். எவர்கள் உன் மீது ஈமான் கொண்டார்களோ அவர்களுக்கு ஆங்காங்கே உள்ள மவ்லவிகள் போன்று இஸ்லாத்தின் பெருமையை அந்தந்த பகுதியில் எடுத்துரைப்பதோ, ஒவ்வொரு பகுதியிலுள்ளமுஸ்லிம்களின் நிலைமையை உயர்த்துவதோ அவர்களின் நோக்கமாக இறைவன் ஆக்கவில்லை. வெறும் எழுத்துக்களினால் மட்டும் இப்பிரச்சனை தீரப்போவதில்லை. மாறாக உலகிற்கு அறிவித்து விடுங்கள். வரவேண்டிய மஸீஹ் மஹ்தி வந்து விட்டார். அல்லாஹ்விடமிருந்து அறிவிப்பு பெற்று உங்களுக்கு கூறுகிறேன். அந்த மஸீஹ் மஹ்தி நானேயாவன். அவர்கள் அறிவித்ததும் பெரும் எதிர்ப்பின் புயலும் கிளம்பவிருந்தது. அந்த எதிர்ப்பும் கிளம்பியது. காதியானிலும் அதன் தாக்கம் இருந்தது. எந்த அளவுக்கு காதியானில் எதிர்ப்பு கிளம்பியது எனில் அன்னாரது சீடர்களுள் சில தூய்மையாளர்கள் தமது ஊருக்கு வந்து விடுமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அழைப்பு விடுத்தனர். அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் தாம் ஏற்றுக் கொள்வதாகக் கூறினர். ஆனால் அல்லாஹ்வின் அருளால் அதனை ஏற்கும் நிலை அன்னாருக்கு ஏற்படவில்லை. 1882 -ல் இஸ்லாத்திற்கு ஆதரவாக பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை அன்னார் எழுதிக் கொண்டிருந்த போது நிலைமை அன்னாருக்கே சாதகமாகும் என்று அல்லாஹ் ஆறுதல் வழங்கினான். அவர்களுக்கு நற்செய்தி வழங்குவீராக. எவர்கள் இறைவனது பார்வையில் உண்மையின் பக்கம் காலெடுத்து வைப்பார்களோ அவர்களிடம் நான் உனக்கு இறக்கிய வஹியை எடுத்துரைப்பீராக. படைப்பினங்களை விட்டு முகம் திருப்பாதீர். படைப்பினங்களின் வருகையைக் கண்டு சோர்ந்து விடாதீர். அதன் பிறகு இன்னோர் இல்ஹாம் வந்தது.

**வஸ்ஸிஃ மகானக** – நீ உனது இடத்தை விரிவுபடுத்துவீராக. இந்த முன்னறிவிப்பில் தெளிவாகக் கூறி விட்டான். ஒருநாள் வரும். அந்நாளில் சந்திப்பிற்காக வருபவர்களால் நெருக்கடி உண்டாகும். எந்த அளவுக்கு எனில் ஒவ்வொருவரும் உன்னை சந்திப்பது சிரமமாகி விடும். எனவே நீர் அவர்களிடம் தீயொழுக்கம் காட்டிவிட வேண்டாம். சோர்ந்தும் போய் விடவேண்டாம். சுப்ஹானல்லாஹ். இது எத்தகைய ஒரு முன்னறிவிப்பு! இந்த முன்னறிவிப்பு கிடைத்த போது எனது மஜ்லிஸுக்கு ஓரிருவர் மட்டுமே வருகை தருவார். அதுவும் எப்போதாவது வந்து செல்வார். **வஸ்ஸிஃ மகானக்க** என்ற இல்ஹாம் (உமது இடத்தை விரிவுபடுத்துவீராக) தரப்பட்ட அவ்வேளையில் ஓரிருவர் மட்டுமே அதுவும் எப்போதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்க வரும்போது இறங்கியது. அதற்கு 5 – 6 வருடங்கள் முன்னுள்ள அவர்களின் வாழ்வைப் பாருங்கள். அவர்களிடம் வாழ்க்கைக்கு தேவையான எதுவும் இருந்ததில்லை. எந்த அளவுக்கு எனில் வாழ்வாதாரம் கூட தகப்பனாரின் பொறுப்பாக இருந்தது.

அன்னாரின் தந்தையார் கூறினார்கள்: ஏதாவது வேலை செய்யும்! நீ வேலை பார்க்கா விட்டால் சாப்பாட்டிற்கு என்ன செய்வீர்? திருமணம் முடிந்து விட்டது. மனைவி மக்களின் உணவுக்கு என்ன செய்வீர்?

இவ்வாறு கேட்கிற தகப்பனாருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் மரியாதையுடன் அளித்த பதில், நான் வேலை செய்கிறேன். ஆனால் நான் **அஹ்கமுல் ஹாகிமீன்** – நீதிபதிகளிலெல்லாம் மிகப்பெரும் நீதிபதி ஆகிய இறைவனின் பணியாளனாக ஆகி விட்டேன். உலகக் காரியங்களில் எனது உள்ளம் திருப்தியடையவில்லை.

தந்தையார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டு மௌனமாக இருந்து விட்டார்கள். ஆனால் அன்னார் பற்றிய கவலை தந்தையாருக்கு எப்போதும் இருந்து வந்தது. அல்லாஹ், ரஸூலின் மீது கொண்ட நேசம் காரணமாக இந்த மகனின் எல்லா பொறுப்புகளையும் அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்டான் என்று அன்னாரின் தந்தையாருக்கு என்ன தெரியும்?

தனக்கும் தனது மனைவி மக்களின் உணவுக்கும் என்ன செய்யப்போகிறார்கள்? என்ற கேள்வியே இல்லை. நேரம் வரும்போது உலகம் பார்க்கும். அன்னாரின் உணவகத்திலிருந்து ஆயிரக்கணக்கானோர் உணவு உண்பர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தந்தையாரின் வஃபாத் நிகழ்வதற்கு முன்பே அன்னார் வஃபாத் ஆகப்போவது பற்றி அல்லாஹ் அவர்களுக்கு தெரிவித்து விட்டான். எனவே மனித இயல்பிற்கேற்ப வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வோம்? என்ற கவலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஏற்பட்டது. அவையனைத்துமே தந்தையாரைச் சார்ந்தே இருந்து வந்தது. இந்த எண்ணம் வந்ததும் அல்லாஹ் இல்ஹாம் வழங்கினான். **அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு** – தன் அடியானுக்கு அல்லாஹ் போதுமானவன் அல்லவா?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த இல்ஹாம் வந்ததும், வெளிச்சம் வந்ததும் இருள் விலகிப் போவது போன்று எனது கவலைகள் ஓடி விட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த இல்ஹாமை ஒரு மோதிரத்தில் பதித்து அணிந்து கொண்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு மிகப்பெரும் பிரபல்யமும் உண்டானது. மேலும் தந்தையார் இருந்த காலத்தில் எனக்கென்று எந்த தனிப்பட்ட பொருள்வளமும் இருந்ததில்லை. எனது தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு இறைவன் எனக்கு மிகப்பெரும் உதவியை வழங்கினான். ஜமாஅத்தின் தர்வேஸ்கள், உண்மையைத் தேடி வருவோர் ஆகிய விருந்தாளிகள் என இறையடியார்கள் தினமும் நூற்றுக்கணக்கில் இங்கு வருகின்றனர்; உணவு உண்டு செல்கின்றனர். மேலும் எழுத்துப்பணிகளுக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஏற்பாடு செய்து தந்தான். நிரந்தரமாக தந்து கொண்டும் இருக்கின்றான். அல்லாஹ் தனது **அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு** என்ற இல்ஹாம் மூலம் தான் போதுமானவனாக இருப்பதாக உறுதியளித்தது மட்டுமின்றி அந்த வாக்குறுதியை நிறைவேற்றவும் செய்தான்.

மேலும் **வஸ்ஸிஃ மகானக்க** – உமது இடத்தை விரிவுபடுத்துவீராக என்ற இல்ஹாம் மூலம் அதனை விரிவுபடுத்தத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தான். இந்த இல்ஹாம் இன்னும்கூட புதிய கம்பீரத்துடன் நிறைவேறுவதைக் காண்கிறோம். இந்த இல்ஹாம் அவர்களுக்கு ஒருமுறையல்ல, பலமுறை இறங்கியது. ஒவ்வொரு முறையும் இந்த இல்ஹாம் இறங்கும்போது விரிவுபடுத்தலின் ஒரு புதிய அடையாளம் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. இதனையே அவர்கள் கூறினார்கள்: பலமுறை ஒரே இல்ஹாம் இறங்கியதன் காரணமும் அதுதான். விரிவுபடுத்தலின் அடையாளம் மேன்மேலும் அதிகமாகிக் கொண்டே இருக்கும். அவர்கள் இல்ஹாமின் கட்டளைக்கேற்ப வெளிப்படையாகவும் விரிவுபடுத்துவதற்கான வெளிப்படையான முயற்சிகளை மேற்கொண்டார்கள். பிறகு உண்மையான வாக்குறுதி அளிக்கும் இறைவன் வாக்குறுதியை நிறைவேற்றுவான் என்று இறைவனிடம் தனது விவகாரத்தை விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இந்த இல்ஹாம் வந்த அந்நிகழ்ச்சி, மஸீஹ் என்று வாதம் செய்வதற்கு முன்பு நடந்ததாகும். அவர்களிடம் உலகரீதியாக எதுவும் இருந்ததில்லை. ஆனால் இறைகட்டளையாக

இருந்தது. எனவே அதனை நிறைவேற்றுவதும் அவசியம் என்று கருதினார்கள். எவ்வாறு உமது இடத்தை விரிவுபடுத்துவீராக என்ற கட்டளையை அன்னார் நிறைவேற்றினார்கள் என்று ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் சனோரி சாஹிப் (ரலி) அவர்களின் அறிவிப்பை எடுத்து வைக்கின்றார்கள். அதனைக் கூறுகின்றேன். மியான் அப்துல்லாஹ் சனோரி சாஹிப் அவர்கள் என்னிடம் (மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப்) கூறினார்கள்:

ஹுஸுர் (அலை) அவர்களுக்கு உமது இடத்தை விரிவுபடுத்துவீராக என்ற இல்ஹாம் வந்த போது என்னிடம் கூறினார்கள். இடங்களை கட்டுவதற்கு நம்மிடம் பணமில்லை. இந்த இறை கட்டளையை இரண்டு மூன்று அறைகளை உருவாக்குவதன் மூலம் நிறைவேற்றுவோம். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்தப் பணிக்காக அமிர்தசரஸில் உள்ள முஹம்மது ஷரீஃப் சாஹிப் அவர்களிடம் என்னை அனுப்பினார்கள். இவர் ஹுஸுர் (அலை) அவர்களின் பழைய நண்பர் ஆவார். அன்னார் அமிர்தசரஸ் சென்றால் அவரது வீட்டில் தங்குவார்கள். எனவே அந்த முஹம்மது ஷரீஃப் சாஹிபிடம் அறைகளை உருவாக்குவதற்கான சாமான்களை வாங்கவும் அறைகளை உருவாக்குபவரை அழைத்து வருவதற்காக நான் அங்கு சென்றேன். இவ்வாறு நான் அந்த நண்பரிடம் கேட்டு பொருட்களையும், ஆட்களையும் அழைத்து வந்தேன். ஹஸ்ரத் சாஹிப் தனது வீட்டில் மூன்று தனி அறைகளை உருவாக்கினார்கள். அவை பல வருடங்கள் வரை இருந்தன. பிறகு அவை இடிந்து விட்டன. ஹஸ்ரத் பஷீர் அஹ்மத் சாஹிப் எழுதுகிறார்கள். இடங்களை விரிவுபடுத்துதல் என்பதன் பொருள் காதியான் வளர்ச்சியடைவதும், அதிகளவு விருந்தினர் வருவதும் ஆகும். இதுவும் உண்மையாகும். இதுவே அக்காலத்தைய நிலையாகும். இடங்களை விரிவுபடுத்த அவர்களிடம் அப்போது எந்தப் பணமும் இருக்கவில்லை. ஓரிரு அறைகளை உருவாக்கும் சக்தி மட்டுமே அப்போது அன்னாருக்கு இருந்தது. எனவே அவர்களுக்கு உறுதியான எண்ணமும் இருந்தது. அல்லாஹ் இந்த இல்ஹாமை நிறைவேற்றும் வாய்ப்பை வழங்குவான் என்ற உறுதி இருந்தது. ஆனால் தனது ஆற்றலுக்கேற்ப அந்த இல்ஹாமியக் கட்டளையை செயல்படுத்துவதையும் அவசியமாக கருதினார்கள். எனவே, இருந்ததைக் கொண்டு ஏற்பாடு செய்தார்கள். ஆனால் இந்த வஸ்ஸிஃ மகானக்க என்ற இல்ஹாம் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் பல்வேறு இடங்களில் இறங்கி இருந்தது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இறங்கியது. எனவே ஒவ்வொருமுறை இந்த இல்ஹாம் இறங்கிய போதும் அவர்கள் புதிய கம்பீரத்துடன் இந்த இல்ஹாம் நிறைவேறும் என்ற எண்ணத்தை உள்ளத்தில் நிரம்பப் பெற்றார்கள். அதனைக் குறித்து தனது பிரசுரங்களில் வெளியிட்டும் உள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு காலகட்டத்திற்கு முன் எனக்கு இல்ஹாம் வந்தது. உனது வீட்டை விரிவுபடுத்துவீராக. மக்கள் தூர தூரத்திலிருந்து உம்மை நோக்கி வருவார்கள். எனவே பெஷாவரிலிருந்து மதராஸ் வரை இந்த இல்ஹாம் நிறைவேறுவதை நான் கண்டுள்ளேன். ஆனால் இந்த இல்ஹாம் மீண்டும் வந்தது. அதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இந்த இல்ஹாம் இன்னும் அதிக ஆற்றலுடன் நிறைவேறப்போகிறது. மேலும் அல்லாஹ் தான் நாடுவதைக் கூறுகிறான். அவனது விருப்பத்தை நிறைவேறாமல் தடுப்பவன் எவனுமில்லை.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் என்னிடம் கூறினான். உலகிலும் ஆகிரத்திலும் உனக்கு நற்செய்தி. உனது முடிவு நல்லதாகும். உதவியும் வெற்றியும் உனக்கு உண்டு. நாம் உமது இடுப்பை முறித்துக் கொண்டிருக்கும் சுமையை இறக்கினோம். உமது புகழை உயர்த்துவோம். நான் உன்னுடன் இருக்கிறேன். நான் உன்னை நினைவு கூர்ந்தேன். நீயும் என்னை நினைவு கூர்வீராக. உமது இடத்தை விரிவுபடுத்துவீராக. ஒரு காலம் வரும். உமக்கு உதவி செய்யப்படும். மக்களிடம் உமது பெயர் கண்ணியத்துடன் உச்சரிக்கப்படும். நான் உன்னுடன் இருக்கிறேன்; இப்ராஹீமே! நான் உன்னுடன் இருப்பது போன்று, உனது குடும்பத்தாருடனும் இருக்கிறேன். நீ என்னுடன் இருப்பது போன்றே உனது குடும்பமும் என்னுடன் இருக்கிறது. எனது உதவியை எதிர்நோக்கத்தக்க ரஹ்மான் ஆவேன். உனது எதிரிகளிடம் கூறிவிடும். எனது இறைவன் உங்களைப்

பிடிப்பான். எனவே அவர்கள் நுபுவ்வத்திற்காக எழுப்பப்படுவதற்கு சில காலம் முன்பே அவர்களின் எல்லா தேவைகளையும் கருத்தில் கொண்டு வஸ்ஸிஃ மகானக்க என்ற இல்ஹாமை இறக்கினான். நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ் தனது அன்பிற்குரியவர்களுக்கு நற்செய்தி தரும் அதே வேளையில் கட்டளையிடுகின்ற அதே வேளையில் அதனை நிறைவேற்றுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் கூட செய்து விடுகிறான். எனவே அவர்களின் இந்த இல்ஹாமின் உண்மைத்தன்மை, இறை உதவியின் காட்சியை நாம் இன்று வரை கண்டு வருகிறோம். அவர்கள் சிறு அறையின் மூலம் இறைவார்த்தைக்கு வெளிப்படையாக செயல்வடிவம் தந்தார்கள். பிறகு ஒரு காலம் வந்தது. தாருல் மஸீஹ் – மஸீஹின் வீட்டிலும் காதியானிலும் பல விரிவாக்கங்கள் உருவாகின. காதியானுக்கு வரும் விருந்தினர் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே சென்றது. பிறகு அவர்களின் தங்குமிடம் உண்ணல், குடித்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் விரிவடைந்து கொண்டே சென்றன. பிறகு முதலாவது கிலாஃபத் மற்றும் இரண்டாவது கிலாஃபத்தில் இடங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் விரிவடைந்தன. பிறகு இந்திய–பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அஹ்மதிகளுக்கு ஒரு சிறு நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் தாருல் மஸீஹ் மற்றும் புனிதஸ்தலங்கள் அனைத்தும் ஜமாஅத்திடமே இருந்தது. 1991 –ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்தியா வந்த பிறகு **வஸ்ஸிஃ மகனாக்க** –ன் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமானது. அஹ்மதிகளின் வீடுகள் ஜமாஅத் கட்டிடங்கள் மிகவும் அதிகரித்தன. பிறகு 2005 –ல் எனது சுற்றுப் பயணத்திற்குப் பிறகு இன்னும் பரந்த பல விரிவாக்கங்களைச் செய்ய அல்லாஹ் தவ்ஃபீக் வழங்கினான். காதியானில் ஜமாஅத் கட்டிடங்கள் பல விரிவாக்கப்பட்டன. மேலும் ஜமாஅத்தின் கட்டடங்கள் தவிர ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தோனேஷியா, மொரீசியஸ் போன்ற நாட்டினர் பெரிய Guest House –களை அங்கு நிறுவினர். ஜமாஅத் அளவில் M.T.A –க்கு ஒரு அழகிய கட்டடம் நஷ்ரோ இஷாஅத் அலுவலகமாக அமைந்துள்ளது. பெரிய Book stall –ம் அதில் உள்ளன. இரண்டு அடுக்கு கண்காட்சி கட்டடங்கள், மூன்று அடுக்கு நூலகம் உள்ளது. குத்தாம் அலுவலகம் உள்ளது. மேலும் லஜ்னா தமக்கென்று தனி கட்டடம் கட்டியுள்ளனர். மர்கஸ் சார்பாக மூன்றடுக்கு Guest House உருவாக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய லங்கர் கானாவை மேலும் விரிவுபடுத்தி புதிய ஒரு Block உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எண்ணற்ற புதிய கட்டடங்களும் விரிவாக்கங்களும் நடந்துள்ளது. இவை அனைத்துக்கும் மேலாக மஸ்ஜித் அக்ஸா விரிவாக்கப்பட்டுள்ளது. இதிலும் சுமார் மூன்றடுக்காக ஆக்கப்பட்டு இடையில் இருந்தவை பின்னுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. சுமார் 5000 பேர் தொழக்கூடியதாக ஆக்கப்பட்டுள்ளது. இதுபோன்று இன்னும் பல மஸ்ஜித்களும் காதியானில் கட்டப்பட்டுள்ளது. அனைத்தையும் விவரிக்க இயலாது. அல்லது நேரில் பார்க்காமல் விரிவாக்கப் பணிகளை அளவிடவும் முடியாது. நான் குறிப்பிட்ட புதிய கட்டடங்கள் அனைத்தும் கடந்த 3 – 4 வருடங்களுக்குள் நடந்தவையாகும். இதுவே அல்லாஹ் தனது வாக்குறுதியை நிறைவேற்றிய விதம் ஒவ்வொரு நாளும் இந்த இல்ஹாம் நிறைவேறுவதைக் காண்கிறோம். காதியானில் மட்டுமல்ல; உலகின் எல்லா இடங்களிலும் அமைதியற்ற சூழ்நிலை நிலவியபோதிலும் பாகிஸ்தானிலும் கூட அல்லாஹ் நமக்கு வாய்ப்பு தந்து கொண்டுதான் இருக்கின்றான். அல்லாஹ் மிகவும் அறிந்துள்ளான். ஆனால் வஸ்ஸிஃ மகானக்க என்ற இல்ஹாம் நிறைவேறும் காட்சியை அல்லாஹ் நமக்கு ஒவ்வொருநாளும் காட்டிக்கொண்டிருக்கின்றான். பிறகு பாகிஸ்தான் இந்தியா மட்டுமின்றி காதியானில் இருந்து புறப்பட்ட அக்குரல் ஜமாஅத்தின் வசதி வாய்ப்புகளை கருத்தில் கொண்டால் சிறு தூரத்தை தாண்டுவதும் சிரமமாகவே இருந்திருக்கும். ஆனால் அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைக்கேற்ப இக்குரல் முழு உலகிலும் பரவி விட்டது. வெறும் சப்தம் மட்டும் பரவவில்லை. வஸ்ஸிஃ மகானக்க –வின் செயல்வடிவத்தை முழு உலகிலும் கண்டோம்.

இந்த மஸ்ஜித் பைத்துல் ஃபுதூஹ் நமது விரிவாக்கங்களின் ஒரு முக்கிய கட்டமாகும. முன்னர் சின்னஞ்சிறு மஸ்ஜித் ஆன ஃபஸ்ல் தான் நமக்கு இருந்தது. அதில் அதிக தொழுகையாளிகள் கூடுவது சிரமமாக இருந்தது. இங்கு எளிதாக அதிகமானோர் ஒன்றுகூட முடிகிறது. இதுபோன்று U.K –யில் இன்னும் பல மஸ்ஜித்கள் உருவாகியுள்ளான். இவை அனைத்தும் வஸ்ஸிஃ மகானக்க –வின் காட்சிகளாகும். மேலும்

அல்லாஹ்வின் அருளால் இவ்வருடமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பருக்கு பேரருள் புரிந்தவாறு வஸ்ஸிஃ மகானக்க –வை நிறைவேற்றும் வாய்ப்பை தந்துள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகள் மிகவும் ஆற்றலுடன் நிறைவேறியுள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ் இல்ஹாமை இறக்கும் போது அதனை நிறைவேற்றத் தேவையான ஏற்பாடுகளையும் பெருமளவு செய்து விடுகிறான்.

இப்போது அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் அஹ்மதிய்யாவின் பள்ளிகள் மற்றும் தொழுகையாளிகளின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 415 ஆகும். அல்லாஹ்வின் அருளால் இந்த எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டுதான் செல்கிறது.

இந்த அதிகரிப்பு சாத்தியமற்றதாக தெரிகிறது. ஆனால் வஸ்ஸிஃ மகானக்க –வின் கட்டளையை இறைவன் இட்ட போது அதனை நிறைவேற்றும் வாய்ப்பையும் அவனே ஏற்பாடு செய்து தந்து கொண்டே செல்கிறான்.

இவ்வகையில் சில பள்ளிகளில் நிர்மாணங்கள் அது சம்பந்தமான நிகழ்ச்சிகளை எடுத்து வைக்கின்றேன். முதலில் இந்தியாவை கூறுகிறேன். அங்கு கர்ஜன் காங்டா மாவட்டம் என்ற பகுதியில் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டதும் ஜமாஅத் பள்ளி கட்டப்படுவதற்கு முஸ்லிம்கள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு உருவானது. இந்துக்களும் அத்துடன் சேர்ந்து கொண்டனர். அந்தப் பகுதியின் போலீஸ் அதிகாரி ஒரு இந்துவாக இருந்தும் நேர்மையான அதிகாரியாக இருந்தார். அவர் அஹ்மதிகளிடம் கூறினார். பகலில் வேலை செய்யாதீர்கள். இரவில் வேலையை ஆரம்பியுங்கள். நானும் சிலரை ஏற்பாடு செய்கிறேன். இவ்வாறு வேலை செய்து ஒரு ஹால் உருவாக்கப்பட்டது. இவ்வாறு எதிரிகளின் எதிர்ப்பு பலனற்றுப் போயிற்று. இவ்வாறு இறைவன் தனது உதவியைக் காட்டுகிறான்.

ஹரியான மாநிலத்தில் ஒரு மஸ்ஜித் உருவானது. அங்கும் புதிய ஜமாஅத். உள்ளூர் ஜமாஅத் மஸ்ஜித் கட்டுவதற்கு முயன்றதும் முஸ்லிம்கள் சார்பாக கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்துக்களும்கூட அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். அப்பகுதியில் குத்தாம்கள் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர். மேலும் இரத்ததான கேம்ப்கள் நடத்தினர். இந்துக்களும் அதிலிருந்து பலன் பெற்றனர். இவற்றால் அப்பகுதியில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. எதிர்ப்பதை விட்டு விட்டனர். ஜமாஅத் அங்கு உறுதியாக நிலைநாட்டப்பட்டது. முஸ்லிம்கள் எதிர்ப்பதை விடவில்லை. ஆனால் பொதுவான முஸ்லிம்களுக்கு எதிரில் இந்துக்கள் அஹ்மதிகளுக்கு ஆதரவளித்தனர். அல்லாஹ்வின் அருளால் அங்கு Mission House –ம் பள்ளிவாசலும் உருவானது.

பிறகு சென்னையில் இவ்வருடம் மஸ்ஜித் ஹாதி கட்டப்பட்டது. இங்கும் ஈரடுக்கு கொண்ட மஸ்ஜித், அத்துடன் ஒரு தங்குமிடம் உள்ளது. இந்த மஸ்ஜித் கட்டுவதற்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவானது. நான் எனது சுற்றுப்பயணத்தின் போது சென்னை சென்றிருந்தேன். அப்பள்ளிவாசலை திறந்து வைத்தேன். இங்கும் எதிர்ப்பு அதிகமானது. எனது சுற்றுப்பயணத்தால் இன்னும் அதிகமானது. சென்றவாரம் நான் ஜனாஸா தொழ வைத்த ஒரு சம்பவம் அதன் தொடர் நிகழ்ச்சியாகும். ஒரு பெண்ணின் கபர் தோண்டப்பட்டது. இதெல்லாம் இதன் காரணத்தால் ஏற்பட்டதாகும். எல்லா இடத்யையும் கைப்பற்றி விடலாம் என்று மவ்லவிகள் கருதுகின்றனர். ஆனால் இதன் காரணத்தால் அல்லாஹ் தப்லீகின் வழியை திறந்து விட்டுள்ளான். பெண்ணின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது குறித்து சில நேர்மையான முஸ்லிம்களும்கூட அதிருப்தி அடைந்ததால் நமக்கு ஆதரவு தருகின்றனர். பிறகு உள்ளூரிலுள்ள ஒரு தொலைக்காட்சி சேனலும் மவ்லவிகளையும் அழைத்தது. நம்மவர்களையும் அழைத்தது. ஒரு Programme Record செய்தது. அதுவும் ஒரு விவாதம் போன்று அமைந்தது. Record செய்யப்பட்ட அந்த நிகழ்ச்சியை தொலைக்காட்சி ஒளிபரப்பும் என்று கூறியுள்ளார்கள். இதனால் தப்லீகின் ஒரு வழி திறக்கும். எனவே எதிர்ப்பின் மூலமும் நமக்கு ஒரு வழியை திறந்துள்ளான்.

பிறகு பெனின் உடைய ஒரு சம்பவம் கூறுகின்றேன். பெனின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒரு மஸ்ஜித் கட்டப்பட்டது. அங்கும் எனது சுற்றுப் பயணத்திற்குப் பிறகு எதிர்ப்பு அதிகமாகி விட்டது. நான் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் சுற்றுப்பயணம் செய்த இடங்களிலும் எதிர்ப்பும் அதை ஒட்டி தப்லீகிற்கான வழியும் திறந்துள்ளது. பெனின் அமீர் சாஹிப் கூறுகிறார். மக்கள் எதிர்ப்பு செலுத்தியவாறு ஒன்றுகூடி எங்கள் ஊருக்கு வந்தனர். புதிதாக பைஅத் செய்தவர்களை மிரட்டினர். குத்தாம்களை அஹ்மதிய்யத்தை விடுமாறு கூறினர். மஸ்ஜித் கட்டக்கூடாது. எங்களிடம் எவ்வளவு பைசா வேண்டுமோ கேளுங்கள் தருகிறோம். நமது மஸ்ஜித்களை உருவாக்கலாம் என்று கூறினர். ஆனால் புதிய அஹ்மதிகளாக இருந்தும் அவர்கள் எதிரிகளுக்கு பதில் தந்தனர். நீங்கள் என்ன செய்ய முடியுமோ செய்யுங்கள். நாங்கள் பள்ளிவாசல் கட்டுவதாயின் (அஹ்மதிய்யா) ஜமாஅத்தின் பள்ளிவாசலை மட்டுமே கட்டுவோம். இங்கு இஸ்லாமிய தப்லீக் நடக்குமாயின், ஒரு மார்க்கம் பரவுமாயின் அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமே பரவும் என்று அந்த அஹ்மதிகள் பதில் அளித்தனர். இவ்வாறு எல்லா எதிர்ப்புகளுக்கும் மத்தியில் மஸ்ஜித் உருவாகி விட்டது.

பிறகு வஸ்ஸிஃ மகானக்க மூலம் இறைவன் செய்யும் உதவி பற்றி இன்னொரு சம்பவம். நைஜீரியாவின் incharge எழுதுகிறார். அங்குள்ள ஒரு Lecturer France –ன் ஒரு பள்ளிவாசல் தொடக்க விழா Programme –ஐ பார்த்தார். நமது Book Stall –க்கு வந்தார். ஆங்கிலேயே நாட்டில் அல்லாஹ்வின் பெயர் உயர்த்தப்படுகின்றதென்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமே நடக்கிறது. அமெரிக்காவிலும் இது ஒருநாள் நடக்கும். அந்த நாள் வெகுதொலைவில் இல்லை. ஏனெனில் அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இருக்கின்றான்.

பிறகு ஐவரிகோஸ்டில் ஒரு சம்பவம் பற்றி எழுதுகிறார்கள்: அங்கு ஒரு நகரில் மஸ்ஜித் கட்டப்பட்ட பிறகு மக்களுக்கு அஹ்மதிய்யத்தின் பக்கம் குறிப்பான கவனம் ஏற்பட்டது. ஒரு College Lecturer மிஸ்டர் அபூபக்கர் சாஹிப் கொஞ்சம் பிரசுரங்கள் நம்மிடம் வாங்கிச் சென்றார். படித்து விட்டு கூறினார். இதனைப் படிப்பதற்கு முன்பு நான் மிகவும் இஸ்திகாரா (நன்மையை நாடி துஆ) செய்தேன். இஸ்லாத்தில் பல பிரிவுகள் உள்ளன. எனவே இறைவனிடம் வழிகாட்டுமாறு துஆ செய்தேன். எனக்கு கனவில் அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி கூறப்பட்டது. இந்த ஜமாஅத்தைப் பாரும். உடனே நான் இந்த ஜமாஅத்தைப் பற்றி ஆய்வு செய்தேன்; படித்தேன். இறைவன் எனக்கு வழிகாட்டினான். நான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டேன். நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில இல்ஹாம்களை உதாரணம் தந்துள்ளேன். அவற்றுள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாமாகிய வஸ்ஸிஃ மகானக்க ஜமாஅத் பரவுவதுடன் கூடவே காதியானில் எல்லைகளை விட்டு வெளியில் வந்து முழு உலகிலும் தனது உண்மையை வெளிக்காட்டி வருகிறது. எங்கு அல்லாஹ் தப்லீகின் விரிவாக்கத்திற்கு வழி ஏற்படுத்தித் தருகிறானோ அங்கெல்லாம் இடங்களை விரிவுபடுத்தும் வழிகளை ஏற்படுத்தியே வருகிறான். தப்லீக் அடிப்படையில் M.T.A. விரிவுபடுத்தலின் புதிய வாசல்களை திறந்துள்ளது. ஆனால் அத்துடன் நான் கூறியதுபோன்று எதிர்ப்பும் அதிகரித்துள்ளது. மேலும் இதுவும் அல்லாஹ் வாக்குறுதியை நிறைவேற்றும் ஓர் வழியாகும். எங்கு ஜமாஅத்தின் தனி நபர்கள் மற்றும் ஜமாஅத்தின் பொருட்களுக்கு நஷ்டம் விளைவிக்கப்பட்டதோ அல்லது அதற்கு முயற்சி செய்யப்பட்டதோ அங்கெல்லாம் அதனை விட அதிகமாக அல்லாஹ் வழங்கி விடுகிறான். ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கும் புதிய வழிகளை திறந்து விட்டு விட்டான். சிலரின் வீடுகள் எரிக்கப்பட்டன. அவர்களுக்கு அதனை விட பெரிய வீடு வழங்கினான். சிலரின் கடைகள் எரிக்கப்பட்டது. அவர்களுக்கு ஒரு கடைக்குப் பதில் இரண்டு கடைகள் வழங்கினான். தொழில்களை முடக்க முயற்சி செய்யப்பட்டது. அதனை விட சிறந்த தொழில்களை அல்லாஹ் ஏற்பாடு செய்து தந்தான்.

அம்மக்களும் பொறுமை மற்றும் விவேகத்துடன் இருந்தனர். ஒரு மஸ்ஜித் பாகிஸ்தானில் சீல் வைக்கப்பட்டதென்றால் மற்ற இடத்தில் 10 மஸ்ஜிதுகளை அல்லாஹ் வழங்கினான். ஆக இது அல்லாஹ்வின் நடைமுறையாகும். ஒவ்வொரு இடத்திலும் இது நமக்கு தென்படுகிறது. ஆனால் அத்துடன் நமக்கு ஒரு

பொறுப்பும் உண்டு. அந்த இறைவன் முன் குனிபவராகவும் அவனது உண்மையான அடியார் ஆகவும் வேண்டும். அப்போது அவன் தனது நிஃமத்துகள் வழங்கிக் கொண்டிருப்பான்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இல்ஹாமாக கூறுகிறான். நீ என்னுடன் இருப்பது போன்று உனது குடும்பமும் (என்னுடன் உள்ளது). எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குடும்பம் ஆவதற்கு அன்னாரின் முன்மாதிரியை நிலைநாட்ட முயல வேண்டும். அதுவன்றி இரத்த உறவு இருந்தும்கூட ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களுடைய மகனை அன்னாரின் குடும்பத்திலிருந்து வெளியேற்றி விட்டான். அல்லாஹ் நம்மை எப்போதும் தன்முன் குனிந்திருப்பவர்களாக்குவானாக. இன்று கபாபிர் ஜமாஅத்தின் ஜல்ஸா ஸாலானாவும் நடக்கிறது. பாலஸ்தீன் மற்றும் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதில் கலந்து கொள்கின்றனர். ஜல்ஸா சம்பந்தமாக நான் குறிப்பிட வேண்டும். மேலும் அவர்களது ஜல்ஸாவுக்கு தூதுச் செய்தியும் தர வேண்டும் என்பது கபாபிர் அமீர் சாஹிபின் விருப்பமாக இருந்தது. எனவே சுருக்கமாக அவர்களுக்கும் சொல்வேன். வஸ்ஸிஃ மகானக்க பற்றி கூறி வந்தேன். கபாபிர் ஜமாஅத்திலும் அது பற்றி கூறுவேன். இங்கு கபாபிர் –ல் ஆரம்பத்திலிருந்தே பெரிய பள்ளிவாயிலைக் கட்டும் வாய்ப்பை இம்மக்களுக்கு தந்து விட்டான். பழைய மஸ்ஜித். நல்ல முக்கியமான இடத்தில் அமைந்தும் உள்ளது. அங்கு செல்கின்றவர்களை ஈர்க்கச் செய்கின்றது. நான் புகைப்படம் பார்த்தேன். மிக அழகிய மஸ்ஜித் ஆக அது இருக்கிறது. கிலாஃபத் ஜுப்ளியையொட்டி இப்பள்ளியின் மேலும் ஒரு பகுதி காலியாக இருந்தது. அதில் ஒரு பரந்த ஹாலும் தேவையான இன்னும் சில கட்டிடங்களும் கட்ட வேண்டும் என்று முடிவெடுத்தனர். நான் அனுமதியும் அளித்தேன். ஆனால் பெரும் திட்டத்தை தீட்டிவிட்டனர். அவர்களது சக்திக்கு அது அதிகம் என்று வெளிப்படையாகவே தெரிந்தது. ஆனால் அல்லாஹ் இங்கும் தனது வாக்குறுதியை நிறைவேற்றிக் காட்டினான். அற்புதமான முறையில் திட்டம் தனது முழுமையை எட்டி வருகிறது. எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் ஒவ்வொரு அருளும் ஒவ்வொரு அஹ்மதிக்கும் அல்லாஹ்வின் முன் மேலும் அதிகம் குனிவதற்கும் நன்றி உணர்வில் திளைப்பதற்கும் காரணமாக அமையும். அல்லாஹ் M.T.A அல் அரபிய்யா மூலமாக அரபு உலகில் தப்லீகை பெருமளவில் விரிவுபடுத்தி விட்டது. இதில் கபாபிர் ஜமாஅத் மக்களுக்கும் பெரும் பங்கு உண்டு. பல்வேறு வழிகளில் இங்குள்ள இளைஞர்கள் உதவி செய்து வருகின்றனர். இதுபோன்ற சில அரபு நாடுகளும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக. ஆனால் ஒவ்வோர் அஹ்மதிகளும் நினைவில் கொள்ள வேண்டும். உங்களின் முயற்சி, வெற்றிகள் உங்கள் சொந்த திறமை, தகுதியின் விளைவால் அல்ல. மாறாக இறை அருளினால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இறைவன் செய்த வாக்குறுதியினால் ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கடைசி காலத்தின் இமாமின் ஹக்கில் முன்னறிவிப்புகள் நிறைவேறியதன் காரணத்தால் ஆகும். எனவே காலத்தின் இமாமை ஒப்புக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்ட எல்லா அஹ்மதிகளும், மேலும் எல்லா அரபு அஹ்மதிகளும் தாம் அரபிகள் என்பதையே தமது பெருமைக்கு காரணமாக்காமல் காலத்தில் இமாமின் குரல் கேட்டு ஸமிஃனா வதஃனா (கேட்டோம்; கட்டுப்பட்டோம்) என்று அழகிய முன்மாதிரியை காட்டியுள்ளனர். எனவே நினைவில் கொள்ளுங்கள். ஒரு உண்மை அஹ்மதியின் ஒவ்வொரு புதிய நாளும் புதிய புதிய முன்னேற்றங்கள் கிடைத்து வர வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு நாளும் ஒரு புதிய முன்னேற்றம் உங்களுக்கு கிடைக்கவில்லை என்றால் கவனம் செலுத்துங்கள். ஆய்வு செய்யுங்கள். அந்த முன்னேற்றத்தைப் பெற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் பயந்து பயந்து பகலை கழித்ததாக இரவு சாட்சி கூற வேண்டும். எனவே தக்வாவில் முன்னேற்றம் பெறுவதே இந்த ஜல்ஸாக்களின் நோக்கமாகும். எனவே ஓர் உறுதி எடுங்கள். எதனைப் பெறுவதற்காக ஜல்ஸாவின் நாளில் இங்கு இருந்தோமோ அந்த தூய மாற்றம் நம்மில் உருவாக வேண்டும். அது நமது வாழ்வின் அங்கமாக வேண்டும். தக்வாவில் வளர்ச்சி பெற வேண்டும். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நமது முன்னேற்றம் தப்லீக் மற்றும் துஆவுடன் தொடர்புடையதாகும். எனவே துஆக்களை வாழ்வின் அங்கமாக்குங்கள். துஆவில்

கவனம் செலுத்துங்கள். தூய்மையான முறையில் இறைவன் முன் குனியுங்கள். உங்கள் துஆக்கள் வானத்தில் ஓர் ஆவேசத்தை ஏற்படுத்தி ஒரு புரட்சியைக் கொண்டு வந்து விடும். அதுவே இஸ்லாத்தின் அஹ்மதிய்யத்தின் ஒவ்வொரு எதிரியையும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் பாதத்தின்கீழ் கொண்டு சேர்க்கும். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். மஸீஹ் மவ்வூது உடைய காலம் அழிவின் காலமல்ல. துஆவின் மூலம் புரட்சியை கொண்டுவரும் காலமாகும். அதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வார்த்தையாகிய யளவுல் ஹர்ப் – போரை நிறுத்துவார் என்று சொல்லப்பட்டுள்ளது.

அல்லாஹ் அரபிகளின் தப்லீகில் ஒரு சிறப்பான ஆற்றலை வைத்துள்ளான். நீங்கள் தூய முன்மாதிரி மூலம் செயல்படுவீர்கள் எனில் இறைவனது பரந்த அருள்மழை உங்கள் மீது பொழியக் காண்பீர்கள். அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாம் அரஃபாத்தில் கனிந்து பூத்துக் குலுங்கக் காண்பீர்கள்.

எனவே இன்று நமது பொறுப்பு நாம் கிறித்தவர்களுக்கும் உண்மையான ஈடேற்றம் கிடைக்க காரணமாக இருக்க வேண்டும். யூதர்களுக்கும் சரியான வழிகாட்ட முயற்சி செய்ய வேண்டும். அவர்களையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பாதத்தின்கீழ் கொண்டு வர முயற்சி செய்தவாறு அவர்களின் நன்மைக்காக ஏற்பாட்டையும் செய்ய வேண்டும். மற்ற மார்க்கத்தினருக்கும் இறைவனை நோக்கி செல்லும் வழியினைக் காட்டுங்கள். இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர்களையும் இறைவனின் பிடியிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்யுங்கள். இது மிகப் பெரிய வேலையாகும். இது மஸீஹே முஹம்மதை ஒப்புக் கொண்டவர்களின் மீது இப்பணி சுமத்தப்பட்டுள்ளது. எனவ கபாபிர் மற்றும் பாலஸ்தீனில் வாழும் அஹ்மதிகளே! இக்காலத்தில் அரபு உலகத்தில் நீங்கள்தான் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு ஜமாஅத் ஆக இருக்கிறீர்கள். எழுங்கள். காலத்தின் இமாமின் ஜமாஅத்திற்கு உதவியாளர்களாகி நஹ்னு அன்ஸாருல்லாஹ்வின் முழக்கமிட்டவாறு நமது தூதுச் செய்தியை எல்லா தரப்பு மக்களிடமும் கொண்டு செல்ல முயற்சி செய்யுங்கள். இன்று முஸ்லிம்களுக்கு நஜாத் – ஈடேற்றம் இதில் தான் இருக்கிறது. அவர்கள் காலத்தின் இமாமை ஒப்புக் கொள்ள வேண்டும். இன்று உலகில் அஹ்மதிகள் தமது பொறுப்பை உணர்ந்து விட்டால், முன்னுள்ள அரபிகள் எவ்வாறு தமது பொறுப்பை மிகவும் தனிச்சிறப்புடன் நிறைவேற்றினார்களோ அதைப்போன்று இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர், உண்மை தாசரின் தூதுச் செய்தியை சென்று சேர்ப்பதிலும் தமது பணியை முழுமையாக செய்தால் அவ்வலீன்(முன்னவர்)களுடன் இணைக்கப்பட்ட ஆகரீன்களாக ஆகி விடுவீர்கள். அல்லாஹ் உங்களுக்கும் எனக்கும் இந்த பொறுப்பை உணரும் வாய்ப்பளிப்பானாக. அல்லாஹ் இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்ட அனைவரையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆவிற்கு வாரிசாக்குவானாக. இந்த ஜல்ஸா அளவற்ற அருளை நெருங்கும் ஜல்ஸாவாக நிரூபிக்கப்படட்டுமாக. நாம் விரைவில் உலகிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கொடியை ஏற்றப்படக்காண்போமாக. ஆமீன்.

இந்த ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு சில ஜனாஸாக்களுக்கு தொழுகை நடத்துவேன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 12.06.2009

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**